**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>**

**<u>அசல் வழக்கு எண். 28/2013</u>**

DW1 – திரு.முரளி நாள். 11.09.2023

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.எஸ்.வாசுதேவன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. வா.சா.ஆ.2 புலப்படம் ஆவணத்தில் சர்வே எண்.177 என்பது தாவா சொத்திற்கு கீழ்புறம் உள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் உள்ள தூம்பு மூலமாக ஏககாலத்தில் இருந்தே தங்கள் நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வருவதால் தான் வா.சா.ஆ.2 ஆவணத்தில் அந்த தூம்பு அடையாளம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 புலப்படத்தில் 177 சர்வே எண்ணில் வாய்க்கால் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் கோடு போட்டுள்ளது அது வாய்க்காலா என்பது எனக்கு தெரியாது. சர்வே எண்கள் 177/1 முதல் 177/7B வரை உள்ள நிலங்களுக்கு தென்பகுதியில் மேற்படி வாய்க்கால் காட்டப்பட்டுள்ளது என்றால் கோடுபோடப்பட்டுள்ளது.

2. வா.சா.ஆ.2 புலப்படத்தில் தாவா சொத்தில் உள்ள தூம்பு வழியாக அதன் தொடர்ச்சியாக வா.சா.ஆ.3 புலப்படத்தில் வாய்க்காலாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 புலப்படத்தில் காட்டப்பட்டுள்ள தூம்பு வழியாகவும்,

வா.சா.ஆ.3 புலப்படத்தில் காட்டப்பட்டுள்ள வாய்க்கால் வழியாகவும் வாதிகள் அவர்களது நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சி வருகிறார்கள் என்றும் மேற்படி விவரங்கள் வழக்கிற்காக இல்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் உண்மை தன்மை அற்றவை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் தாவா சொத்தில் உள்ள வாதிகளின் உரிமையை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல.

3. என் எதிர்வாதத்தில் சொல்லப்பட்டுள்ள விசயங்களும் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்களும் முரணானது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் பணப்பயிர்கள் என சொல்லப்படும் மிளகாய் போன்ற பயிர்கள் போடப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 புகைப்படத்தில் காட்டப்பட்டுள்ள நிலத்தில் நெல் விவசாயம் செய்த பின்னர் பணப்பயிர் விவசாயம் செய்வார்கள் என்றால் சரியல்ல, பணப்பயிர் மட்டும் தான் விவசாயம் செய்வார்கள். பி.வா.சா.ஆ.4 புகைப்படமானது தாவா சொத்திற்கானது என எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது ஊரில் நெல் விவசாயம் செய்த பின்னர் பணப்பயிர்கள் விவசாயம் செய்வது வழக்கம் என்றும் அதை நான் மறுக்கிறேன் என்றால் சரியல்ல. பணப்பயிர் விவசாயம் செய்யும் காலங்களில் எங்கள் ஊரில் உள்ள கண்மாயில் உள்ள தண்ணீரை வாதிகள் உட்பட நாங்கள் விவசாயத்திற்கு பயன்படுத்துவோம் என்று சொன்னால் சரியல்ல.

4. தாவா சொத்து வழியாக வாதிகள் அவர்கள் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு அவர்களது வழக்கஉரிமை (Customary Right) என்றும் அதை தடை செய்ய எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

வாதிகள் தங்களது நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சி வரும் தாவா சொத்தில் உள்ள தூம்பை அகற்றுவதற்கு எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் எங்கள் கிராமத்தில் பெரும்பான்மை சமூகத்தை சார்ந்தவர்கள் என்பதால் வாதிகளை சிரமப்படுத்த வேண்டும் என்பதற்காக வீண்எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரியல்ல.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை